திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்து பதிவு செய்யப்பட்டது. மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2010-2011, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2010-2011 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010-2011 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை@ இம்மாமன்றத்தின்முன் வைக்கின்றேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 11,772 கோடி அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூபாய் 9,144 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 2,628 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

@ 20 முதல் 24 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளன.

2011 பிப்ரவரி 10][பேராசிரியர் க. அன்பழகன்]

2010-2011 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை சட்டப் பேரவையில் 2010 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 9 ஆம் நாளன்று தாக்கல் செய்யப்பட்ட பின்னர், 'புதுப் பணிகள்' / 'புது துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், இத்திட்டங்களுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடு செய்வதும்தான் இந்தத் துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும். தமிழக மக்களின் நலனைக் கருத்திற்கொண்டே இத்தகைய சில புதிய செலவுப் பொறுப்புகள் இந்த அரசால் மேற்கொள்ளப்பட்டன.

முற்பகல் 10-00

தமிழ்நாடு மின்சார வாரியம் அரசுக்குச் செலுத்த வேண்டிய மின்வரி மற்றும் மின்வரி மீதான தண்ட வட்டித் தொகையான ரூபாய் 1,235.13 கோடியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பங்கு மூலதனமாக அரசு மாற்றியுள்ளது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 14-எரிசக்தித் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்திற்கு கூடுதலாக ரூபாய் 258.22 கோடி அரசுக்குத் தேவைப்படுகிறது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுவதற்கு கூடுதலாக ரூபாய் 214.52 கோடி அரசுக்குத் தேவைப்படுகிறது. இத்தொகை 'மானியக் கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கு டீசல் மானியம் மற்றும் ஊதிய ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு கூடுதலாக ரூபாய் 623.49 கோடி வழிவகை முன்பணமாக தேவைப்படுகிறது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

[பேராசிரியர் க. அன்பழகன்][2011 பிப்ரவரி 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2010-2011 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

2010-2011 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய் ஆயிரத்தில்) வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநில சட்டமன்றம்	3,27,54	-	-
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	1	-	-
3	நீதி நிருவாகம்	73,55,82	-	-
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	92,19,57	21,83,48	-
5	வேளாண்மைத் துறை	45,42,51	10,90,46	16,44,47
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	72,41,37	86,46	-
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	6	-	-
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	4,22,10	-	-
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	58,64,04	3	-
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	29,38,36	-	-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
	வருவாய்	மூலதனம்	கடன்
11 முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	21,75,89	-	-
12 கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	46,11,73	12,52,13	5,99,76
13 உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	9,41,91	70,00	-
14 எரிசக்தித் துறை	5	1,235,13,00	-
15 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	24,18,96	7	
16 நிதித் துறை	36,60,35	-	4,49,98
17 கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	26,98,19	3,70,78	2,60,36
18 கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	53,16,78	-	-
19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	548,73,82	2	-
20 உயர் கல்வித் துறை	390,39,96	2	-
21 நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை	98,36,22	27	-

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
	வருவாய்	மூலதனம்	கடன்
22 காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	252,00,43	81,56,26	-
23 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	11	16,26	-
24 சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	1,72,31	45,71	-
25 இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	15,11,24	-	-
26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	45,79,74	-	72,36,00
27 தொழில் துறை	136,38,08	94,53,75	120,66,99
28 செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	5,41,59	-	-
29 சுற்றுலா-கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)	4,21,77	5,97,32	-
30 எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	2,54,49	3,13,34	-
31 தகவல் தொழில்நுட்பவியல் துறை	273,07,81	—	-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
	வருவாய்	மூலதனம்	கடன்
32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	16	8,44,63	-
33 சட்டத் துறை	31,48	-	-
34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	346,99,61	7	1
35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	2,52,63	-	-
36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	2	-	-
37 மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை)	15,42,84	-	-
38 பொதுத் துறை	47,40,93	-	-
39 கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	19,82,60	15	-
40 பாசனம் (பொதுப் பணித் துறை)	59	50	-
41 வருவாய்த் துறை	52,26,01	-	-
42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	551,73,59	288,11,79	-
43 பள்ளிக் கல்வித் துறை	1,352,24,15	3,37,41	-
44 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	20,26,75	66,68	-
45 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	349,27,17	-	-

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)		
	வருவாய்	மூலதனம்	கடன்
46 தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	24,28,17	-	-
47 இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	5	-	-
48 போக்குவரத்துத் துறை	2,90,10	8,89,34	623,49,28
49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	6,16,12	-	-
50 ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	2,122,61,49	-	-
51 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	1,203,31,07	-	-
பெருமொத்தம்	8,488,68,44	1,780,99,93	846,06,85

7. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2010–2011, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010-2011 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial Year 2010-2011."

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS